எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

21 ஜனவர 2017

பொது காலம் 3ம் ஞாயிறு

# என்னை வழிநடத்தும் நம்பிக்கை



இன்றைய நற்செய்தியில் முதல் சீடர்க்ள் அனைத்தையும் துறந்து கிறிஸ்துவைப் பின்பற்றியது போல, இந்த நம்பிக்கை நமது உள்ளத்தில் எதை ஊடுருவச் செய்யும்? கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு தங்களது உடைமைகளை அனைத்தையும் விட்டுச் சென்ற சீடர்களின் விசுவாசச் செயலை, அது அக்காலச் செயல் என எளிதில் நாம் ஓரம் கட்டிவிடுகிறோம். குடும்பம், தொழில், கௌரவம், சமுதாய அந்தஸ்து போன்றவை அவர்களுக்கும் இருந்தன. ஆனால் ஒரு மனிதனின் மீதான நம்பிக்கையால் அனைத்தையும் உதறித் தள்ளினர்

கிறிஸ்துவ நம்பிக்கை என்பது “நமது சொந்த பலத்தினால் அல்லாமல், தூய ஆவியின் அருளின் துணையோடு கிறிஸ்துவின் வாக்குறுதி மீது நமது நம்பிக்கை வைத்து, நித்திய பரலோக வாழ்வே நமது பேரின்பம் என நாம் ஆசிப்பது” என மறைக்கல்வி படிப்பினை கூறுகிறது. எந்தவொரு உலக இன்பமும் தீர்க்க முடியாது ஆசையைத் தூண்டும் நமது ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் இடையிலான கலந்துரையாடலே, நம்பிக்கை. “ஆனால் காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்து விட்டது...” என்ற வாசகத்தோடு இந்த கலந்துரையாடலை தொடங்கினார் கிறிஸ்து. இந்த வாசகம் உங்கள் உள்ளத்தில் பேரின்பத்தின் எதிர்பார்ப்பைத் தூண்டவில்லை என்றால் ‘சொந்த இறையாட்சியில்’ நாம் திளைத்திருக்கிறோம் எனப் பொருள்படும்.

நாம் வாழ்க்கையின் எந்த நிலையில் இருந்தாலும், கடவுள் நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். கடவுளின் அழைப்பை செவிமடுப்பதற்குத் தேவையான அனைத்தும் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தில் நாம் சுமக்கும் சுமைகளை இறக்கி வைக்கும் நன்னாளை எதிர்பார்த்திருக்கிறோம். ஆயினும் நிலைத்தன்மையும் குளப்பமும் நிலவும் வேளையில், இதற்கு மாறாகவே எண்ணங்கள் இருக்கின்றன. இந்த காலத்தில் இருப்பதில் நாம் உள்ளம் மனநிறைவு கொள்கிறது. சுய வலிமையும் சுய பலத்தையும் நம்பி இருக்கிறோம். நாம் அனுபவிக்கும் இந்த இன்பத்தை இறையாட்சிக்கான கைவிடுவது, கடினமாக இருக்கிறது. நமது செபத்தில் நமது நிலைக்கு இறையாட்சியை நாம் கொண்டு வரும் போது, இந்த வாழ்க்கையிலேயே பேரின்பத்தை எதிர்பார்க்கிறோம். இதனால் கிறிஸ்து நமக்காக கொண்டு வந்த நம்பிக்கை அணைத்துப் போய்விடுகிறது.

முதல் சீடர்கள் மகிழச்சியான நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். கிறிஸ்துவின் அழைப்பைக் கேட்டது, அவர்களின் எதிர்பார்ப்பு மாறியது. மீனவர்கள் என்ற அனுபவத்தில், தங்களது சொந்த திறமையை மட்டும் நம்பி இல்லை, அவர்களது திறமையை விட ஏதோ மற்றொன்று தேவை என்பதை உணர்ந்தார்கள். அன்றாட தொழிலில் கடலின் ஆழத்திற்கு அடித்துச் செல்லும் அலையும், உயிரையே பணயம் வைக்கும் உயரும் கடலின் சீற்றமும், தங்களது சொந்த பலத்தாலோ திறமையாலோ மேற்கொள்ள முடியாது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். முதல் சீடர்களை அழைத்த போது, இதை விட மேலான ஒன்றுக்கு கிறிஸ்து கொண்டு சென்றார். நமது மீட்பின் பணியில் உடனுழைப்பாளர்களாக இருக்க அவர் அழைத்தார். வாழ்வின் அருளைக் கொண்டு வரும் மகிழ்ச்சியின் ஊற்றுக்கு அழைத்துச் செல்லும் நம்பிக்கைக்கு அவர்களை அவர் அழைத்தார்.

இறையியல் பண்பில் பார்த்தால், தூய அருளின் துணையுடன் மனிதனின் செயலால் நம்பிக்கை அடைய முடியும். மகிழ்ச்சியை தேடி அலையும் நாம் அனைவரும், கடவுளைத் தேடுவதில் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நமது சக்திக்கு அப்பால் இருக்கும் மகிழ்ச்சியைக் காண முடியும். இதற்கே கிறிஸ்து இன்று நம்மை அழைக்கிறார். இந்த மகிழ்ச்சி உலகைச் சார்ந்ததாக இருக்கும் என எண்ணலாகாது. எண்ணற்ற வேதசாட்சிகளின் தியாகத்தால் கட்டப்பட்ட திருச்சபை இதற்கு மாறான மகிழ்ச்சியை வழங்குகிறது. கிறிஸ்துவில் நாம் காணும் மகிழ்ச்சி, உலகைச் சார்ந்த இன்பத்தை மஞ்சி விடும். இதனால், சீடர்கள் தங்களது குடும்பத்தையும் வாழ்க்கையையும் விட்டு விட்டு, மகிழ்ச்சியின் ஊற்றை நம்மைப் போல் பின்பற்றினர். ✝

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 03/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*

*என் நிலையில் கிறிஸ்துவை அனுபவிக்கிறேன்*

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு: (ஆண்டு இரண்டு) சனி 20-01-2018 ஞாயிறு 28-01-2018**

யோனா 3: 1-5, 10 தி.பா 24: 4-5ab, 6, 7bc, 8-9 1 கொரி 7: 29-31 மாற்கு 1: 14-20

**ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும் (தி. பா 24)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 20 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித மேரி) | |
| ஞாயிறு | 21 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (புனித சிசிலியா)<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித ஜோர்ஜ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி** (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 22 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் நடைபெறாது (ஆ) பொது விடுமுறை* |
| செவ் | 23 | காலை திருப்பலி நடைபெறாது | | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 24 | குருக்களின் ஆண்டு | | **மாலை 7.45 அதிச ஒருங்கிணைப்பாளர்களின் குழு கூட்டம் (BECCOT)** |
| வியா | 25 | மேய்ப்புப்பணி மாநாடு | | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 26 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் நான்காம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

இ.ச 18: 15-20 தி.பா 94: 1-2, 6-7, 8-9 1 கொரி 7: 32-35 லூக்கா 1: 21b-28

**உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர், ஆண்டவர் குரலுக்குச் செவிசாய்ப்பீர். (தி. பா 94)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 27 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித றொபேட்) | **காலை 10.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 28 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (லூர்து அன்னை -சாகா)<br>திருப்பலி (ஆங்கிலம்) (மறைக்கல்வி ஆங்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி** (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய **புனித சிசிலியா** அதிச மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 ஜனவரி (தை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை**

13/14 ஜனவரி **ரிம**: 8,418.25

**இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!**

2) **மினவுதல் தேவாலய புகழ்ச்சி நடனம்** 1ஆம் ஆண்டு நிறைவையொட்டி சீனப் புத்தாண்டு கொண்டாட்டம். 10-02-2018 காலை 7.00 – மதி 1.00 மணிவரை ஆலய மண்டபத்தில் நடைபெறும். கட்டணம் ஒருவருக்கு ரி.ம. 10 மட்டும். தொடர்புக்கு: ஏஞ்செலின் 017-694 3045, புளோரன்ஸ் 016-281 9788

3) **ஆலயத்தில் உள்ள வகுப்பறைகள்/மண்டபங்கள் முன்பதிவு:** கூட்டங்கள் , நிகழ்வுகள், ஒத்திகை ஆகியவற்றை நடத்த முன்கூட்டியே இடங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள். கடைசி நேர பயன்பாட்டைத் தவிர்க்கவும்.

- **உதவும் கரங்கள்** - மாணவர்கள் பள்ளிப் பாடங்களையும் பரீட்சைகளையும் சமாளிக்க உதவுதல். 2018 ஆண்டு எங்களுடைய சேவையின் 3ம் ஆண்டாகும். உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உதவ தன்னார்வ ஊழியர்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் திரு. பிரான்சிஸ் ஜேசு (012-2964336) அல்லது திரு. ஹிலரி ஸ்தா மரியா (019-6547347) ஆகியோரை தொடர்பு கொள்ளவும். இந்த வகுப்புகளுக்கான பதிவு ஜனவரி 21ம் தேதி அன்று, காலை 9 மணி ஆங்கில திருப்பலிக்குப் பிறகு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.
- **புத்தக விற்பனை கண்காட்சி மற்றும் தேவ அழைத்தல் அறிமுக விழா** புனித பவுலடியாரின் சபை சகோதரிகள் ஜனவரி 2018 20 & 21ம் (சனி/ஞாயிறு) தேதிகளில் புத்தக விற்பனைக் கண்காட்சி நடத்தவுள்ளனர்.
- **மேசைகள் நாற்காலிகளை** மறைக்கல்வி வகுப்புகள் மற்றும் ஆலயத்திலுள்ள ஏனைய இடங்களிலிருந்து நீக்கவோ இடம் மாற்றவோ வேண்டாம். அவைகளை நல்லபடியாக பயன்படுத்தவும் சேதாரம் விளைவிக்க வேண்டாம்.

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:**
அ) தருமன்ராஜ் & ரோஸ்லின்: 27/01/2018 காலை 11.00
ஆ) டானி தர்ஷன் & அனாபெல் 27/01/2018 மாலை 3.30

- **மாமறை மாவட்ட அழைத்தலுக்கான குழு (APVT)** ஜனவரி 20/21 தேதிகளில் நம் ஆலயத்திற்கு வருகை தரவிருக்கின்றார்கள். அவர்களை நாம் வரவேற்போம்
- **தவக்கால தியானம் :** "மனதின் அடிப்படை மாற்றம்" *"உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொள்ளுங்கள் (யோவேல் 2:13)*

தமிழ் : 16-02-2018 (வெள்ளி) காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
ஆங்கிலம் : 17 & 18 -02-2018 (சனி) கா 9.00 மா 8.00 (ஞாயிறு) கா 9.00 – பி.ப 2.00
சீனம் : 10-02-2018 (சனி) பி.ப 2.00 - மாலை 6.00
தே.மொ : 10 & 11 -02-2018 (சனி) பி.ப 2.00 – 6.00 (ஞாயிறு) பி.ப 2.00 – மா 6.00

- **கிறிஸ்துவர்களின் ஒன்றிப்பு வாரம்: 18-25 ஜனவரி 2018** - பிற கிறிஸ்துவ சகோதர சகோதரிகளோடு ஒரு வாரம் செபத்தில் ஒன்றித்திருக்க அழைக்கிறோம். மினவுதல் தேவாலய குழு 26-01-2018 வெள்ளி 8.00 மணி செபத்தை முன்னின்று வழி நடத்துவர். அனைவரையும் வரவேற்கிறோம்.
- **குருத்துவ அபிஷேகக் கொண்டாட்டம்**:
டீக்கன் நிக்கோலஸ் ஹோ ஜெங் கின்( ரஹாங் கார்மேல் சபை, சிரம்பான்
நாள்: ஜனவரி 31, 2018 (பொதுவிடுமுறை) காலை 10.30
இடம்: புனித தோமஸ் மூர் ஆலயம், சுபாங் ஜெயா, அனைவரையும் வரவேற்கிறோம்.
- **170 ஆம் ஆண்டு கொண்டாட்டம் பிப்ரவரி 3, 2018**
அனைத்து மொழியினரும் பங்கெடுக்கலாம்.
வயது 7 வயதினருக்கும் மேல்
தொடர்புக்கு: எட்ரியன்(ஆ) 010-897 0642 /
அண்டர்சன் (தே.மோ) 019-4688 277
ஐரின் (த) 016-366 6843 / எட்வின் (சீ) 012 2059209




- ராக்கேலின் திராட்சைத் தோட்டத் தியானம்: கருக்கலைப்பினால் துயரத்தில் இருப்போருக்கு ஒரு தியானம். இறைவன் உங்கள் காயங்களை ஆற்றி, குணமளித்தல் தர அழைக்கிறார். இதற்கான தியான மார்ச் மாதம் 16-18 வரை பினாங்கில் நடைபெற உள்ளது. இந்த குணமளித்தல் இவர்களுக்குத் தேவை என்று நீங்கள் நினைத்தால் இவரைத் தொடர்பு கொள்ளுங்கள். சிரில்லா (016-419 0538) நேரம் 7-9 காலை அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். விவரங்கள் அனைத்தும் இரகசியமாக இருக்கும். இறுதி நாள்; 16-02-2018
healinggracerachelsvineyard@gmail.com

- **மறைதிரு. ஜோர்ஜ் - ஜனவரி 13-21 வரை விடுமுறையில் செல்லவிருக்கிறார்**. அவரை நம் செபத்தில் ஒப்புக்கொடுப்போம்.
- **குருக்களின் ஆண்டு மேய்ப்புப்பணி மாநாடு (CAPA)** ஜனவரி 22-25 2018 வரை நடைபெறும்.
- **அதிச ஒருங்கிணைப்பாளர்களின் குழு கூட்டம்** (BECCOT) ஜனவரி 24, 2018 மாலை 7.45
- **பொங்கல் திருவிழா**: ஜனவரி 27 (சனி) மாலை 7.00 மணிக்கு: திரு.சி.பாண்டித்துரை அவர்களின் சொற்பொழிவு "**என்றும் நல்ல நாள்**"
**ஜனவரி 28, 2018 பகல் 2.00 முதல் 7.30 வரை** கலை கலாச்சார நிகழ்வுகள் அனைவரையும் வரவேற்கிறோம். அனைவரும் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய உடை அணிந்து வருமாறு அழைக்கிறோம். மேலதிக தொடர்புக்கு : கிளமென்ட் (017 692 7211) போல் ராஜ் (014 639 5608)
- **சாகா சிற்றாலயம் - புனித லூர்து அன்னை திருவிழா** பிப்ரவரி 9-11, 2018
- **திருநீற்றுப் புதன்** பிப்ரவரி 14, 2018
- **சீனப் புத்தாண்டு திருப்பலி** பிப்ரவரி 16, 2018 காலை 8.30 மணி